**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No. 131 /2021**
**PW 16**

| | | |
|---|---|---|
| Name | : | **கோவிந்தசாமி** |
| Father's/Husband's Name | : | **கந்தசாமி** |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.04.2025.

**Accused 1 - 3 present.**

**முதல் விசாரணை –**

(1) நான் தற்போது திருப்பத்தூர் மாவட்டம் நக்சலைட் தடுப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் இதற்கு முன் திருவண்ணாமலை தாலுக்கா காவல் நிலைய வட்ட ஆய்வாளராக பணிபுரிந்தபோது 18.07.2017 அன்று மங்கலம் காவல் நிலைய குற்ற எண். 58/2017, இதச பிரிவுகள் 174 Crpc Suspicious death @ 302 இதச வழக்கில் எனக்கு முன் இருந்த ஆய்வாளர் குமார் என்பவர் புலன் விசாரணை செய்து வைத்திருந்த வழக்கை நான் என்னுடைய மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். இவ்வழக்கில் இறந்து போன ரமேஷ் என்பவருக்கு பிரேத பரிசோதனை அலுவலுக்கு சென்ற காவலர் காமராஜ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இந்த வழக்கில் வேலூர் தடய அறிவியல் ஆய்வக அலுவலர் சீனுவாசனிடம் அறிக்கை பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இறந்து போன நபருக்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் கமலக்கண்ணனை விசாரித்து பிரேத பரிசோதனை சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இந்த வழக்கின் விசாரணை முடித்து கூடுதல்

இயக்குனரிடம் அறிவுரை பெற்று குற்ற இறுதி அறிக்கையை எதிரிகளின் மீது 302 உ/இ 34 ன் கீழ் தாக்கல் செய்தேன்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u> –

(1) நான் தலைமை காவலர் காமராஜ், தடய அறிவியல் ஆய்வக அலுவலர் மற்றும் பிரேத பரிசோதனை செய்த கமலக்கண்ணன் ஆகியோரை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் குமார் சரியாக புலன் விசாரணை செய்யாமல் அவரால் பொய்யாக ஜோடிக்கப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்கள், ஆவணங்கள், சான்றுபொருட்கள் அடிப்படையில் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த வழக்கில் பொய்யான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இறந்து போன ரமேஷ்ன் இறப்பிற்கு உண்மையான காரணம் தெரியாமல் ஆய்வாளர் குமார் கேட்டுக்கொண்டவாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளுக்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல. எதிரிகள் விடுதலை செய்யப்படவேண்டியவர்கள் என்றால் சரியல்ல.

**Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.**

**Sd/-B.C. Gopinath.,M.L.,**
**Additional District Judge,**
**Tiruvannamalai.**